# கரூர் மாவட்டத்தில் மாபெரும் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகள்

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழங்கினார்



கரூர்,அக்.20-

கரூர் தாந்தோணி அரசு கலைக்கல்லூரியில் (19.10.2024) 150-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்ட மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இம்முகாமில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செந்தில்பாலாஜி கலந்து கொண்டு தேர்வானவர்களுக்கு பணிநியமன உத்தரவுகளை வழங்கினார்கள். இந்நிகழ்சிக்கு கலெக்டர் மீ.தங்கவேல், கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ஜோதிமணி , சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம்(குளித்தலை), ஆர். இளங்கோ(அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி, மேயர் வெ.கவிதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவுப்படியும், துணை முதலமைச்சர் வழிகாட்டுதல் படி கரூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம், தமிழ்நாடு மாநில ஊரக - நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது.

இந்த தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் 150-க்கும் மேற்பட்ட தனியார் துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்கள் நிறுவனங்களுக்கு தேவையான நபர்களை வேலைக்கு தேர்ந்தெடுத்து உள்ளார்கள்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி அதன் மூலம் பணி ஆணைகளை பெறுபவர்களின் முகத்தில் உள்ள சந்தோஷத்தை பார்க்கும் போது முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி நடைபெற்ற இந்த முகாமின் வெற்றியாகும்.

கரூர் மாவட்டத்தை பொருத்தவரை இதுவரை 7 தனியார் நிறுவனங்களின் வேலை வாய்ப்பு முகாம்களும், சிறிய அளவிலான 53 வேலைவாய்ப்பு முகாம்களும் என மொத்தம் 60 முகாம்கள் நடத்தப்பட்டு அதில் 1425 தனியார் நிறுவனங்கள் பங்கு பெற்று உள்ளது. இதன் மூலம் 5071 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு 420 தொழில் நிறுவனங்களில் பணி புரியும் வாய்ப்பை பெற்றுள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் வெளிநாடுகளில் முதலீடுகளை ஈற்று அதன் மூலம் பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கி இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வகையில் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் செயல்பட்டு கொண்டிருக்கிறார்கள்.

ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து இதுவரை நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்கள் மூலம் ஒரு லட்சத்து 75 ஆயிரம் நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது இது தான் மக்களுக்காக உழைக்கிற அரசு திராவிட மாடல் அரசு ஆகும்.

இங்கு வந்து உள்ளவர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் தேர்வு செய்திருந்தால் ஏதாவது ஒரு நிறுவனத்தை தேர்வு செய்து மீதி பணியிடங்களுக்கு மாற்று நபர்கள் தேர்வு செய்யும் வகையில் உதவிட வேண்டும். தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர் உடைய வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மாதம் ரூ. 1000 மகளிர் உரிமை தொகையை வழங்கி இந்தியாவுக்கே வழிகாட்டும் வகையில் இத்திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

மேலும் இம்முகாமில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெற பதிவு, மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளுக்கான விண்ணப்பங்கள் வழங்குதல், தொழில் பழகுனர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம், அயல் நாட்டு வேலை வாய்ப்புக்கான ஆலோசனை முகாம், சுயதொழில் தொடங்க மாவட்ட தொழில் மையம், தாட்கோ போன்ற நிறுவனங்களின் மானியத்துடன் கூடிய கடன் திட்டத்திற்கான ஆலோசனைகள் வழங்குதல், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தில் வழங்கப்படும் இலவச பயிற்சி வகுப்புகளுக்கு சேர்க்கை முகாம், டி.என்.பி.சி., டி.ஆர்.பி, டெட், தகுதி தேர்வுகள் போன்ற அரசு பணிக்கான போட்டி தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கை ஆகியவை நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன், துணை மேயர் ப.சரவணன், மாநகராட்சி அணையர் சுதா, மாநகராட்சி மண்டல குழு தலைவர் எஸ்.பி.கனகராஜ், கோல்டுஸ்பாட் ராஜா, அன்பரசு, சத்திவேல், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் வி. பாபு, 44 ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் எஸ். மோகன்ராஜ், தான்தோன்றிமலை அரசு கலைக் கல்லூரி முதல்வர் அலெக்சாண்டர், தாந்தோணி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் சிவகாமி, குளித்தலை நகர்மன்ற தலைவர் சகுந்தலாபல்லிராஜா, பள்ளப்பட்டி நகர்மன்ற தலைவர் முனைவர்ஜான், வேலைவாய்ப்புத்துறை மண்டல இணை இயக்குனர் கோவை ஆ.ஜோதிமணி, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் டி. ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமினை தொடங்கி வைத்து, தேர்வான 522 பேருக்கு பணி நியமன ஆணை

## அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்



பெரம்பலூர்,அக்.20-

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டல் மையம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் (19.10.2024) தனலட்சுமி சீனிவாசன் பல்கலைகழகத்தில் தொடங்கி வைத்து, முகாமினை பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கே.என்.அருண் நேரு முன்னிலை வகித்தார். தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கொ.வீரராகவராவ் கலெக்டர் கிரேஸ் பச்சாவ் ஆகியோர் தலைமை வகித்தனர். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநர் பா.விஷ்ணு சந்திரன் திட்ட விளக்கவுரையாற்றினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆதர்ஸ் பசேரா, பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் , துறையூர் சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இந்த வேலைவாய்ப்பு முகாமில், பெரம்பலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள MRF உள்ளிட்ட நிறுவனங்கள் மற்றும் சென்னை காஞ்சிபுரம், ஒசூர், கோயமுத்தூர், திருப்பூர், மதுரை மற்றும் திருச்சி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 142 முன்னணி தனியார் நிறுவனங்களும் 03 திறன் பயிற்சி நிறுவனங்களும் கலந்து கொண்டன.

இன்றைய முகாமில் 2,021 ஆண்களும், 2,211 பெண்களும் என மொத்தம் 4,232 நபர்கள் கலந்து கொண்டார்கள். இதில் 362 ஆண்களுக்கும், 159 பெண்களுக்கும், 01 மாற்றுத்திறனாளிக்கும் என மொத்தம் 522 நபர்களுக்கு உடனடி பணி நியமன ஆணைகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் வழங்கினார். இந்த முகாமில் இரண்டாம் கட்ட தேர்வுக்கு49 ஆண்களும், 58 பெண்களும் என மொத்தம் 107 நபர்கள் தேர்வாகியுள்ளனர். தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் நடத்தப்படும் பல்வேறு இலவச திறன் பயிற்சிகளுக்கு 15 நபர்கள் விண்ணப்பம் வாயிலான விருப்பம் தெரிவித்துள்ளனர். இம்முகாமை தொடங்கி வைத்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் படித்த இளைஞர்கள் தங்களுடைய சான்றிதழ்களுடன் வேலை தேடி ஆங்காங்கே அலைந்து கொண்டிருந்த காலம் மாறி தற்போது அனைத்து மாவட்டங்களிலும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தி அதன் மூலம் இளைஞர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என உத்தரவிட்டுள்ளதன் அடிப்படையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் பல்வேறு தனியார் வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம்களின் மூலம் இதுவரை சுமார் 2,17,000 நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். தமிழ்நாடு முதலமைச்சர் மாணவ,மாணவிகள் உயர்கல்வியினை மேம்படுத்தும் வகையில் அவர்களுக்கான திறன் மேம்பாட்டை உயர்த்தும் வகையில் "நான் முதல்வன்" என்ற திட்டத்தினை அறிவித்து அதற்காக ரூ.200 கோடிக்கும் மேல் நிதி ஒதுக்கீடு செய்து இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்க ஏற்பாடு செய்துள்ளார்கள். நான் முதல்வன் என்ற போர்ட்டலை உருவாக்கி, நாம் என்ன படிக்கலாம், எங்கு படிக்கலாம், என்ன படிப்பு படித்தால் என்ன வேலை கிடைக்க வாய்ப்பு உண்டு என்ற விவரங்களை உள்ளடக்கியதாக அந்த போர்ட்டல் விளங்குகின்றது. அதுமட்டுமில்லாமல் கல்லூரி படிக்கும் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் எந்த துறையை தேர்ந்தெடுத்தால் அதிக பணி வாய்ப்பு கிடைக்கும் என்பது போன்ற பல்வேறு சிறப்பு வசதிகளுடனும் இந்த போர்ட்டல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை மாணவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின்னர் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வானவர்களுக்கு பணி நியமன ஆணைகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். மேலும். முன்னோடி வங்கி மூலம் இரண்டு நபர்களுக்கு தலா ரூ.1.20லட்சம் மதிப்பிலான கல்விக் கடனுதவிக்கான காசோலையினையும், ஒரு நபருக்கு சுயதொழில் தொடங்க ரூ.17 லட்சம் மதிப்பிலான கடனுதவிக்கான காசோலையினையும் அமைச்சர் வழங்கினார்.

மேலும் தொழில் பழகுநர் பயிற்சிக்கான சேர்க்கை முகாம் நடைபெற்றது.

மேலும் இம்முகாமில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தில் வழங்கப்படும் இலவச பயிற்சி வாய்ப்புகளுக்கு சேர்க்கை முகாமும், தமிழ்நாடு அரசின் அயல் நாட்டு நிறுவனத்தின் (OMCL) பதிவு வழிகாட்டுதல்கள், TNPSC, TNUSRB-Police, TRB,TET போன்ற அரசு பணி போட்டி தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர்க்கையும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர்கள் சி.ராஜேந்திரன், (பெரம்பலூர்) தர்மன் ராஜேந்திரன் (திருச்சி), அட்மா தலைவர் ஜெகதீசன், நகர்மன்றத்தலைவர் அம்பிகா இராஜேந்திரன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மண்டல இணை இயக்குநர் இர.தேவேந்திரன், இணை இயக்குநர்கள் வே.மீனாட்சி, அ.அனிதா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜ்குமார், துரைசாமி, ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர்கள் மீனா அண்ணாதுரை (பெரம்பலூர்), க.ராமலிங்கம் (வேப்பந்தட்டை), வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை உதவி இயக்குநர் செ.ரமேஷ் குமார், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) ஆ.பொ.ஆறுமுக வெங்கடேஷ், பெரம்பலூர் மாவட்டம் மற்றும் பெரம்பலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பொது விநியோகத் திட்ட மக்கள் தொடர்பு முகாம்

நாகப்பட்டினம்,அக்.20-

நாகை மாவட்டம் கொத்தமங்கலம் ஊராட்சியில் பொது விநியோகத் திட்ட மக்கள் தொடர்பு முகாம் நடைபெற்றது. முகாமிற்கு வட்ட வழங்கல் அலுவலர் ரகு தலைமை தாங்கினார்.ஊராட்சி மன்ற தலைவர் விவேகானந்தன் முன்னிலை வகித்தார். முகாமில் குடும்ப அட்டையில் பெயர் சேர்த்தல்,பெயர் நீக்கம்,பெயர் திருத்தம்,கடை மாற்றம்,முகவரி மாற்றம்,புதிய அட்டை விண்ணப்பம், தொலைபேசி எண் பதிவு செய்தல், குடும்பத் தலைவர் புகைப்படம் மாற்றம் செய்தல் உள்ளிட்டவைகளுக்கு கொத்தமங்கலம், அனந்தநல்லூர், பனங்காட்டூர் கிராமங்களை சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட மனுக்களுக்கு உடனடி தீர்வு வழங்கப்பட்டது.

# தமிழகத்தில் கல்லூரிகளில் பேராசிரியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய பிரச்சனை விரைவில் தீர்க்கப்படும்

## அமைச்சர் கோவி.செழியன் பேட்டி



கும்பகோணம்,அக்.20-

தமிழகத்தில் உள்ள கல்லூரிகளில் பேராசிரியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வு ஊதிய பிரச்சனை விரைவில் தீர்க்கப்படும் என்று சனிக்கிழமை கும்பகோணம் கலைக்கல்லூரி பட்டமேற்பு விழாவிற்கு வந்த உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி செழியன் செய்தியாளர்களிடம் கூறினார். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் உள்ள அரசு கலைக்கல்லூரியில் 2020 - 21 ஆம் ஆண்டில் பயின்ற மாணவ மாணவியர்களுக்கு பட்டமேற்பு விழா வெள்ளி, சனிக்கிழமைகளில் நடைபெற்றது. சனிக்கிழமை நடைபெற்ற பட்டமேற்பு விழாவிற்கு வந்த தமிழக உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் செய்தியாளர்களிடம் கூறியது, கும்பகோணம் மிக பழமையான கல்லூரி, உயர்கல்வித்துறை அமைச்சராக விழாவில் கலந்து கொள்ள வாய்ப்பு, ஊதியம் வழங்கப்படவில்லை என்று போராடும் பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர்களிடம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது, மாலைக்குள் பிரச்சனை தீர்ந்து விடும், தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகளில் ஊதியம் மற்றும் ஓய்வு ஊதிய பிரச்சனை விரைவில் தீர்க்கப்படும். அரசு கல்லூரிகளில் காலியாக உள்ள பணியிடங்களை கௌரவ பேராசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளது, விரைவில் நிரந்தர பேராசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை என்பது வரும் 2030 க்குள் 50 சதவிகிதம் கல்வித ரம் உயர்ந்து விடும் என்கிறது அரசின் கொள்கை. ஆனால் முன்னாள் முதல்வர் கருணாநிதி ஆட்சி காலத்தில் கொண்டு வரப்பட்ட சமச்சீர் கல்வி கொள்கை மூலம் கல்வித்தரம் தற்போது 54 சதவிகிதம் உயர்ந்துள்ளது, அதைத் தான் முதல்வர் ஸ்டாலினும் நடைமுறைப்படுத்தி வருகிறார். ஒன்றிய அரசின் கல்வி கொள்கையை விட தமிழக அரசின் கல்வி கொள்கை சிறந்தது, உயர்ந்தது என்றார். பின்னர் 1487 பேர்களுக்கு பட்டங்களை வழங்கினார். ஏற்பாடுகளை முதல்வர் அ.மாதவி, தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் ரா.சா.சுந்தரராசன், துறைத்தலைவர்கள் ஆசிரியர்கள் அலுவலர்கள் செய்திருந்தனர்.

# அரியலூர் மாவட்டத்தில் உங்களைத் தேடி, உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் ஆண்டிமடம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் கலெக்டர் ஆய்வு



அரியலூர்,அக்.20-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், "மக்களை நாடி, மக்கள் குறைகளை கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ் கலெக்டர் மற்றும் மாவட்ட நிலை அலுவலர்களுடன் ஒவ்வொரு மாதமும்; வட்ட அளவில் தங்கி கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து மக்களின் குறைகளை கேட்டறிந்து அரசின் அனைத்து நலத்திட்டங்கள், சேவைகள் தங்குதடையின்றி மக்களை சென்றடைவதை உறுதிசெய்ய வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு மாதமும்; ஒரு தாலுகா தேர்வு செய்யப்பட்டு "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டம் செயல்படுத்திட தமிழ்நாடு அரசால் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன்படி நேற்றைய தினம் (18.10.2024) அரியலூர் மாவட்டம், ஆண்டிமடம் வட்டத்தில் பல்வேறு அரசு துறைகளின் அலுவலகங்கள், அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் உள்ளிட்டவை குறித்து கலெக்டர் மற்றும் மாவட்ட நிலை அலுவலர்கள் ஆகியோர் நேரில் கள ஆய்வு பணிகள் மேற்கொண்டனர். தொடர்ந்து மாவட்ட நிலை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டமும் நடைபெற்றது. மேலும் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் கலெக்டர்பெற்றுக்கொண்டார். தொடர்ந்து, பூவாணிப்பட்டு ஊராட்சியில் தெரு விளக்குகள் சரியாக செயல்படுகிறதா என்று பார்வையிட்டு சரியாக செயல்படாத தெரு விளக்குகளை சரி செய்ய சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர், அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகளை பார்வையிட்டு, விடுதியில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, சமையல் பொருட்களின் வைப்பறை, இருப்பு பதிவேடு உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறித்து ஆய்வு செய்ததுடன், மாணவர்களுக்கு தயார் செய்யப்பட்ட உணவினை சாப்பிட்டு உணவின் தரத்தினை கலெக்டர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில் ஆண்டிமடம் வட்டாட்சியர் ராஜமூர்த்தி, செயற்யற்பொறியாளர் மாது, மாவட்ட நிலை அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் இதர துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

# கும்பகோணம் வட்டார கோயில்கள் நூல் அறிமுகம்

நீடாமங்கலம்,அக்.20-

வலங்கைமான் வட்டாரம் தென்குவளவேலி அரசு பள்ளி ஆசிரியரும் எழுத்தாளருமான ஆதலையூர் சூரியகுமார் எழுதிய கும்பகோணம் வட்டாரக் கோயில்கள் என்ற புதிய நூல் அறிமுக நிகழ்ச்சி திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் தனியார் நீலன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

எழுத்தாளர் நீலன் அரங்கில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் பள்ளியின் தாளாளர் நீலன்.அசோகன் நூலை அறிமுகப்படுத்த நூலாசிரியர் ஆதலையூர் சூரியகுமார் பெற்றுக் கொண்டார்

.தொடர்ந்து நூலாசிரியர் ஆதலையூர் சூரியகுமார் கூறியதாவது: தமிழகத்தில் ஆன்மீகப் பயணம் மேற்கொள்ள வேண்டும் என்று விரும்பும் பக்தர்களுக்கு கும்பகோணம் முதல் தேர்வாக இருக்கிறது. கும்பகோணத்தைச் சுற்றி நவக்கிரக தலங்கள், பஞ்சவாரண்ய தலங்கள் என்று வழிபடுவதற்கும் பரிகாரம் செய்வதற்கும் நிறைய கோயில்கள் உள்ளன. அப்படி கோயில்களை வழிபட வரும் பக்தர்களுக்கு தேவையான முழு தகவல்களுடன் கூடிய இந்த புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தில் கோயிலின் தல வரலாறு, பரிகாரம் செய்யும் முறைகள் ஆகியவை விரிவாக கொடுக்கப்பட்டுள்ளன. மேலும் கோயிலின் தொடர்பு எண்களும் கொடுக்கப்பட்டிருப்பது பக்தர்களுக்கு கூடுதல் வசதியாக இருக்கும் என்றார்.

**மாண்புமிகு முதன்மை மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிமன்றம் திருவள்ளூர்**
**எச்.எம்.ஜி.ஓ.பி.எண் 229/2024**
**இந்து மைனர் மற்றும் பாதுகாவலர் சட்டம், 1956 மற்றும் மைனர் எஸ்.மானசா மற்றும் மைனர் எஸ்.அக்ஷ்யா சம்பந்தமாக**
**திருமதி.எஸ்.அனுசுயா, வயது 41, க/பெ.மறைந்த சுப்பிரமணியம் கதவு. எண். 10, இந்திரா நகர், 2வது தெரு, ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டம். மனுதாரர்**
**ஐயா/அம்மா,**
**மேலே பெயரிடப்பட்ட மனுதாரர் மேற்கண்ட எச்.எம்.ஜி.ஓ.பி. மனுவை தாக்கல் செய்திருப்பதால் வடசென்னை பதிவு மாவட்டம், முன்பு செம்பியம் உப- பதிவு மாவட்டம், தற்போது மாதவரம் உப-பதிவு மாவட்டம், முன்பு கோட்டை தண்டையார் பேட்டை வட்டம், தற்போது பெரம்பூர் வட்டம், ஜம்புலி கிராமம், பழைய சர்வே எண் 19/3, புதிய சர்வே எண். 8/2 ல்அடங்கியசென்னை.600060, மாதவரம், அன்னை வேளாங்கன்னி நகர், மனை எண். 18 விஸ்தீரணம் 2425 சதுரடிகள் கொண்ட காலி மனையை திருமதி.ஷெர்லின், த/பெ.பொன்னுரங்கம், எண்.7, ஹார்பர் காலனி, 1 வது தெரு, கொடுங்கையூர், சென்னை 600118 என்பவருக்கு விற்பனை செய்வதற்கும், விற்பனை தொகையில் ரூ.10,00,000/- மைனர் S.மானசா பெயரிலும், ரூ. 10,00,000/- மைனர் S. அக்ஷ்யா பெயரிலும் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் டெபாசிட் செய்யவும் மனுவில் கோரப்பட்டுள்ளது மேற்கூறிய மனு மீது யாருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 07.11.2024 அன்று காலை 10.30 மணிக்கு மேற்படி நீதிமன்றத்தில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை பதிவு செய்யவும் இல்லையெனில் மேற்கண்ட மனு மீது தகுதி அடிப்படையில் முடிவு செய்யப்படும்.**
**S.தமிழ்பிரபு**
**மனுதாரர் வழக்கறிஞர்**

# திருவாரூர் ஒன்றியத்தில் ரூ.59 லட்சம் மதிப்பில் கட்டப்படுள்ள புதிய கட்டிடங்கள்

## எம்.எல்.ஏ. பூண்டி கலைவாணன் திறந்து வைத்தார்



திருவாரூர்,அக்.20-

திருவாரூர் ஊராட்சி ஒன்றியம் சேமங்கலம் ஊராட்சியில் ரூ34 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பிலான புதிய பள்ளி கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மற்றும் ஊராட்சி மன்ற புதிய அலுவலகம் கட்டிடம் திறப்பு விழா,மாங்குடி ஊராட்சியில் ரூ14 லட்சத்து 31 மதிப்பிலான புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் திறப்பு விழா,வேலங்குடி ஊராட்சியில் ரூ10 லட்சம் மதிப்பிலான பொது வினியோக கட்டிடம் ஆக மொத்தம் ரூ58 லட்சத்து 91 ஆயிரம் மதிப்பிலான புதிய கட்டிடங்களை திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் பொதுமக்கள், மாணவ, மாணவிகள் பயன்பாட்டிற்க்காக திறந்துவைத்தார்.இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்த சட்டமன்ற உறுப்பினரை அனைத்து ஊராட்சிகளிலும் மேளதாளங்களோடு வரவேற்பு அளித்து மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி தலைவர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
Old No:5, New No: 9, kannan Street, Korukkupet, Chennai - 600021.
Ph: 044-25952015,9842165236
E-Mail: chennaiedi@thinaboomi.com
RNI.Regn No.55306/93
Editor:MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# பெரம்பலூர் அருகே அரசு பள்ளியில் தடுப்பூசி போட்ட மாணவனுக்கு கையில் அறுவை சிகிச்சை: வேப்பூர் ஒன்றிய குழு துணை தலைவர் நிதி உதவி



பெரம்பலூர்,அக்.20-

பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டம் ஆடுதுறையில் அரசு உயர்நிலைப் பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். இந்நிலையில் கடந்த மாதம் 13ம் தேதி பள்ளியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் லப்பைக்குடிகாடு அரசு துணை சுகாதார நிலையத்தின் மூலம் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. அந்தப் பள்ளியில் வீராமநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த சங்கர் நிர்மலா இவர்களின் மகன் அர்ஜுன் பத்தாம் வகுப்பு படித்து வருகிறான். கடந்த மாதம் பள்ளியில் போட்ட தடுப்பூசியால் அர்ஜுனன் என்ற மாணவனுக்கு கைவீங்கி வலி ஏற்பட்டுள்ளது.இதனை அடுத்து அருகில் இருந்த லப்பைக்குடிக்காடு அரசு துணை சுகாதார நிலையத்திற்கு சென்று . சிகிச்சை பெற்று சரியாக காரணத்தால் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். அங்கு பள்ளி மாணவன் அர்ஜுனுக்கு இரத்த பரிசோதனை செய்யப்பட்டு மேல சிகிச்சைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். திருச்சி அரசு மருத்துவமனையில் பள்ளி மாணவனுக்கு தடுப்பூசி போடப்பட்ட இடத்தில் கை வீங்கி சீல் பிடித்ததால் அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பத்து நாள் சிகிச்சை பெற்ற பிறகு தற்போது வீடு திரும்பி உள்ளார். இதுகுறித்து பள்ளி மாணவனின் பெற்றோர் மருத்துவரிடம் விசாரணை செய்த போது தடுப்பூசி முறையாக செலுத்தாதது இதற்கு காரணம் எனவும் மேலும் பள்ளியில் தடுப்பூசி செலுத்தும் போது செவிலியர்கள் செல்போன் பேசிக் கொண்டு பள்ளி மாணவர்களுக்கு தடுப்பூசி செலுத்தியதாகவும் கூறுகின்றனர். இத் தகவல் அறிந்து சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலை சிறுத்தை கட்சியின் தலைவருமான தொல். திருமாவளவன் ஆணைக்கிணங்க வேப்பூர் விசிக வடக்கு ஒன்றிய செயலாளரும் வேப்பூர் ஒன்றிய குழு துணை பெருந்தலைவர் செல்வராணி வரதராஜன்

மற்றும் வேப்பூர் வடக்கு ஒன்றிய விசிக செயலாளர் வரதராஜன் ஆகியோர் நேரில் சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு நிதி உதவி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில இளஞ்சிறுத்தை வழக்கறிஞர் பாலா. மாவட்ட அமைப்பாளர்கள் பொன் சங்கர். அத்தியூர் மணிமாறன் . ஒன்றிய பொருளாளர் சின்னதுரை ஆகியோர் உடன் இருந்தனர்

